பொலிஸ் வெகுமதி நிதியம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 73(4) பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் நலன்புரிச் செலவினத்தின் கீழ் பொலிஸ் மாஅதிபர் கட்டளை RTM 613 பிரகாரம் அனுராதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் போதைப் பொருள் சுற்றிவலைப்பிற்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு சிற்றுணவு வழங்குவதற்காக பொலிஸ் வெகுமதி நிதியிலிருந்து ரூபா 17,337,800 கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களில் அதை ரூபா 18,259,400 ஆக	அனுராதபுரம் பிரிவில் போதைப்பொருள் சுற்றிவலைப்பிற்கு பங்கபற்றிய உத்தியோகத்தர்களுக்கு சிற்றுணவு வழங்குவதற்காக ரூபா 18,259,400 தொகை வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் ரூபா 6,724,815 தொகையொன்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அனுராதபுரம் பிரிவில் போதைப்பொருள் சுற்றிவலைப்பிற்கு பங்கபற்றிய உத்தியோகத்தர்களுக்கு சிற்றுணவு வழங்குவதற்காகான	கட்டுநிதி வழங்குவது மற்றும் தீர்பனவுகள் முறையாக செம்மையாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும்.

	குறிப்பிடப்பட்டுள்ளதால் ரூபா 921,600 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டடில் 15 பொலிஸ் பிரவுகளிற்காக அந்த கடமைகளுக்காகவே செலுத்தப்பட்டிருந்த ரூபா 196,042,483 செலவுகளிற்குரியதாக செயற்பாடுகளில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடகளின் எண்ணிக்கை, கைதுகளின் விபரங்கள் மற்றும் வழக்குத் தாக்கல்களின் விபரங்கள் உள்ளடங்களாக தகவலகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் அந்தச் செலவினத்தின் சரியானதன்மையை உறுதி செய்துக்கொள்ள முடியாமலிருந்தது.	செலவாக ரூபா 11,534,585 தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்ட்டுள்ளது.	
(ஆ)	மீளாய்வாண்டினுள் உணவகம் / ஒற்றையர் குடியிருப்பு இல்லங்களை மற்றும் திருமண உத்தியோகபூர்வ இல்லங்கள் நிர்மாணித்தல், போபுருஎல்ல அரச புலனாய்வு சேவை விடுதி நிர்மாணித்தல், பம்பலபிட்டிய பொலிஸ் பரிசோதகர் விடுதிக்காக தளபாடங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பொலிஸ் விளையாட்டு பிரிவிற்காக உடல் பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 620,677,109 தொகை, ரூபா 7,718,626 தொகை, ரூபா 7,368,725 மற்றும் ரூபா 20,025,343 தொகையாக கூட்டுப் பெறுமதி ரூபா 655,789,893 தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன் அந்த மொத்த செலவினம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அல்லது நடைமுறை வேலையாக வகைப்படுத்தாது மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினமாக குறிப்படப்பட்ட காரணத்தால் ஆண்டின் மிகை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டினுள் உணவகம் /ஒற்றையர் குடியிருப்பு இல்லம் மற்றும் திருமண உத்தியோகபூர்வ இல்லங்களின் திருத்தங்கள் மற்றும் நிர்மாணங்களிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 620,677,109 தொகையிலிருந்து கட்டிடங்கள் திருத்தங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தவிர புதிய கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம், போபுருஎல்ல அரச புலனாய்வு சேவை விடுதி நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,718,626 ஆன செலவினம், பம்பலபிட்டிய பொலிஸ் பரிசோதகர் விடுத்க்காக மேறகொள்ளப்பட்ட ரூபா 7,368,725 ஆன செலவினம் தளபாடங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் மேலும் பொலிஸ் விளையாட்டு பிரிவிற்கான உடல் பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,025,343 ஆன செலவினம் நடைமுறை அல்லாத சொத்துக்களாக நிதிககூற்றுக்களில்	மூலதன செலவுகள் நடைமுறை அல்லாத சொத்துக்களாக சரியாக நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்க வேண்டும்.

		காண்பிக்கப்பட 2025 ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதென.	
(இ)	அஞ்சல் திணைக்களத்திற்கு செலுத்தப்படும் மோட்டார் வாகன தண்டப்பணம் ரூபா 31,910,800 தொகை பொலிஸ் வெகுமதி நிதியத்தின் வருமானமாக அல்லது பெற வேண்டிய வருமானமாக இனங்காணாததால் மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் பெற வெண்டிய வருமான மீதி அவ் அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2024 திசெம்பர் மாதத்திற்கான அஞ்சல் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மோட்டார் வாகன தண்டப்பணமான ரூபா 64,301,600 மற்றும் ரூபா 65,205,800 ஆகிய தொகைகளின் கூட்டுத்தொகையான ரூபா 129,507,400 ஆன மொத்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாககன தண்டப்பண வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதென.	பேற வேண்டிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	மீளாய்வாணடில் நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்து வருமானத்தை கணக்கீடு செய்யும் போது 02 நீதிமன்றங்களிலிருந்து ரூபா 483,575 கூடுதலாகவும், மேலும் 05 நீதிமன்றங்களிலிருந்து ரூபா 913,668 குறைவாககவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் வருமாகக்கூற்றில் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 430,093 குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.	பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண தொகையை கணிப்பீடு செய்வது பொலிஸ் பிரிவு அலுவலகங்களினால் வழங்கியுள்ள அறிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்பட்டள்ளதுடன், பிரிவு அறிக்கை மற்றும் நீதிமன்ற காசோலைகளிற்கிடையே, வித்தியாசம் காரணத்தால் நீதிமன்ற தண்டப்பணம் கூடுதலாக மற்றும் பிரிவு அறிக்கை மற்றும் நீதிமன்ற காசோளைகளற்கிடையில் வித்தியாசம், நீதிமன்றத்தினால் வெகுமதி நிதியத்திற்கு தவறுதலாக பணம் செலவு வைக்கப்பட்டது போன்ற காரணங்களினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென.	தண்டப்பண வருமானத்தை சரியாக இனங்கண்டு கணகீடு செய்ய வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய நிதிமன்ற தண்டப்பண வருமானம் கணக்கீடு செய்யும் போது 03 நீதிமன்றங்களிலிருந்து ரூபா 9,765,058 தொகை கூடுதலாகவும், மேலும் 04 நீதிமன்றங்களிலிருந்து ரூபா 932,918 குறைவாகவும், கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் நிதிநிலைமை கூற்றில் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 8,832,140 ஆன தொாகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பேற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 8,832,140 தொகை கூடுதலாக கணக்கீடு செய்ததனை 2025 ஆம் ஆண்டில் சரி செய்வதென.	பேற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.5.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	விடயம்	நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி	துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி	வித்தியாசம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
		ரூபா	ரூபா	ரூபா		
(அ)	பொது கட்டுநிதி	229,642,000	236,093,430	6,451,430	பொது கட்டுநிதி சரியாக கணக்கு வைத்துள்ளதென.	பிரிவு அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	பொது கட்டுநிதி செலவினம்	209,695,223	216,144,153	6,448,930	பொது கட்டுநிதி செலவினம் சரியாக கணக்கு வைத்துள்ளதென.	பிரிவு அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

	விடயம்	தொகை	வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
		ரூபா			
(அ)	நீதிமன்ற தண்டப்பண வருமானம்	122,508,386	மீதி உறுதிப்பாட்டு கடிதங்கள்	நீதிமன்றங்களினால் பெற வேண்டிய தண்டப்பண பெறுமதி உறுதிபாடுகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	மீதி உறுதிபாடுகளை சரியாக வழங்குவதற்கு தொகுதியை மேம்படுத்த வேண்டும்.
(ஆ)	பொது கட்டுநிதி வழங்குதல்	199,153,150	மீதி உறுதிப்பட்டு கடிதங்கள்	கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் விரைவில் வழங்குமாறு பிரிவு அலுவலகங்களை அறிவுருத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	மீதி உறுதிபாடுகளை சரியாக வழங்குவதற்கு தொகுதியை மேம்படுத்த வேண்டும்.
(இ)	விசேட கட்டுநிதி	8,000,100	உத்தியோகத்தர்கள் பணம் பெற்றுக் கொண்டதாக கையெப்பம் இடப்பட்ட ஆவணங்கள்.	சிவளொலி பாதமலை யாத்திரை பருவத்திற்காக இரத்தினபுரி மற்றும் ஹட்டன் பிரிவுகளால் செய்யப்பட்ட செலவுகள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் இரத்தினபுர மற்றும் ஹட்டன் பிரிவு அலுவலகங்களில் இருப்பதாக அறிவித்துள்ளது.	மீதி உறுதிபாடுகளை சரியாக வழங்குவதற்கு தொகுதியை மேம்படுத்த வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு	இணக்கமின்மைகள;	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் 186	கிடைக்கும் அனைத்து பணமும் முடிந்தவரை பணம் பொறுப்பேற்கும் உத்தியோகத்தருக்கு கிடைக்கும் திகதியிலேயே கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டிய போதும், 2025 சனவரி பெறப்பட்டிருந்த ரூபா 129,724,115 தொகை 2024 திசெம்பர் மாத பெறுவனவாக காசுப் புத்தகம் வரவு வைக்கப்பட்டிருந்தது.	தேறிய செலவினங்கள் கணக்கிடப்பட வேண்டியதால், 2024 ஆம் ஆண்டிற்குரியதாக 2025 ஆம் ஆண்டில் பெறுவனவு, 2024 திசெம்பர் மாத பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுப்பதென.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/ 2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் திருத்திய நிதிப்பிரமாணம் இலக்கம் 877 (2)(ஈ)	நிதி ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களினுள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2025 மார்ச் 14 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்ட்டுள்ளது.	எதிர்வரும் ஆண்டுகளில் உரிய திகதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென.	சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.
(இ)	அரச பெறுகைகள் வழிகாட்டியின் 1.2.1	போம்பூரு எல்ல பிரதேசத்தில் அரச புலனாய்வு சேவைக்கான குடியிருப்பு கட்டிடத்தை நிர்மாணிப்பதை முறையான அரசாங்க பெறுகைகள் நடைமுறைகளைப் பின்பற்றாது அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுருந்தது.	அரச புலனாய்வு சேவைக்கான போம்பூரு எல்ல பிரதேசத்தில் கட்டிடத்தை நிர்மாணிப்பது அரச புலனாய்வு சேவையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தகவல்கள் பின்னர் சமர்ப்பிக்கப்டுவதென.	அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நிர்மாண ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்ய வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,946,877,157 ஆன மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,828,432,640 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 1,881,555,483 ஆன பற்றாக்குறை அவதானிக்கப்பபட்டது. இவ் பற்றாக்குறைக்கு நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,801,372,067 குறைந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	போபுருவ எல்ல இல்லத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை பொலிஸின் வெகுமதி நிதியத்திலிருந்து கூட்டுத்தொகை ரூபா 29,982,268 தொகை செலுத்தி இருந்த போதும், அந்த ஒவ்வொரு கொடுப்பனவு சந்தர்ப்பங்களிற்காக நிர்மாண ஒப்பந்ததாரரினால் நிர்மாண முன்னேற்றத்தை காண்பிக்கும் அளவு கணிப்பீட்டு பத்திரத்தை சமர்ப்பித்திருந்த போதும், அந்த வேலை பத்திரத்தின் படி வேலைகளை அத்தாட்சிப்படுத்திய தரப்பினரை உறுதி செய்து கொள்வதற்காக தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காததனால் கொடுப்பனவுகளின் சரியான தன்னைமயை உறுதி செய்துகொள்ள முடியாமலிந்தது.	அரச புலனாய்வு சேவையின் போபுருவ எல்ல இல்லத்திற்காக செலவிடப்பட்ட தொகைக்குரியதான பௌதீக ரீதியான முன்னேற்றத்தை மற்றும் நிதிரீதியான முன்னேற்றத்தை அரச புலனாய்வு சேவை மூலம் கோரரியுள்ளதுடன், தகவல்கள் கிடைத்த பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்டுவதென.	கொடுப்பனவை உறுதி செய்வதற்காக தேவையான அனைத்து அட்டவணைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதிக்கு நிதி நிலைமைக்கூற்றில் குறிப்பிடப்படும் செலுத்த வேண்டிய விஷேட வெகுமதி ரூபா 137,243,278 ஆன மீதிக்காக, அட்டவணைகள் சமர்ப்பித்திருந்த போதும், அந்த ஒவ்வொரு விஷேட கொடுப்பனவிற்குரியதாக காரணம் மற்றும் அதன் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் அந்த அட்டவணையில் குறிப்பிடப்படாததனால் அதன் சரியானதன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமலிருந்தது.	நிதிக்கூற்றுக்களில் 05 ஆம் அட்வணையின் கீழ் குறிப்படப்பட்டுள்ள ஆவணத்தின் ஒவ்வொரு கொடுப்பனவிற்குரியதான காரணம் மற்றும் அதன் தற்பொதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ளதென.	கொடுப்பனவுகளுக்குரிய அனைத்து விரிவான அட்டவணைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(இ)	ரூபா 14,071,238 ஆன கிரய செலவில் கடவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒற்றையர் குடியிருப்பு இல்லத்தை நிர்மாணப்பது 05 பெறுகைக் கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவு செய்யப்படாத ஒரு ஒப்பந்ததாரருக்கு செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கிரய மதிப்பீட்டை பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்க வேண்டிய போதும், ஒப்பந்ததாரரினால் தயாரிக்கப்பட்டிருந்தது.	கடவத்தை பொலிஸ் நிலைய ஒற்றையர் குடியிருப்பு இல்லத்தை நிர்மாண ஒப்பந்தத்ம் தொடர்பாக களனி பிரிவிலிருந்து தகவல்கள் பெற்றுக்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதென.	நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரி சபையின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் ஒவ்வொரு நிர்மாண கட்டத்திற்கும் வெவ்வேறாக கேள்வி மனு அழைப்பித்து மூலம் ஒரு ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதுடன், கிரய மதிப்பீட்டை பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நீதிமன்றங்கள் மூலம் பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு பணத்தை அனுப்புப் போது 2024 திசெம்பர் 31 திகதிக்கு 03 மாதங்களை விட அதிக தாமதத்துடன் 07 நீதிமன்றங்களால் வழங்க வேண்டிய தொகை ரூபா 8,002,295 ஆனது. இதன் பிரகாரம் நீண்ட கால தாமதத்துடன் வெகுமதி நிதியத்திற்கு வருமானம் சேகரிப்பதன் ஊடாக, நிதிப்பிரமானம் 128 (2) (உ) மற்றும் (ஊ) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நீதிமன்ற தண்டப்பணத்தை பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு தாமதமின்றி அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதென.	குறித்த ஆண்டினுள்ளே சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர 31 திகதிக்கு தயாரிக்கப்பட்டிருந்த பொலிஸ் வெகுமதி நிதியத்தின் வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதிக்கு இனங்காணப்படாத பெறுவனவாக 14 சந்தர்ப்பங்களிற்கு உரியதாக ரூபா 2,199,692 ஆன மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. அம் மீதியினுள் 2023 ஆண்டிற்குரிய 04 சந்தர்ப்பங்களில் ரூபா 66,018 ஆன மீதியொன்று ஓராண்டிற்கும் அதிக காலமாக இனங்காணப்படாத பெறுவனவாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், அந்த பெறுவனவை சரியாக இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வங்கி இணக்கக்கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவை செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதென.	இணக்கக்கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரைகள்	பரிந்துரை
மதிப்பிடப்பட்ட பாதீட்டுடன் உண்மையான பெறுமானங்களை ஒப்பிடும் போது மொத்த வருமானம் 28 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், மொத்த செலவு 38 சதவீததினால் குறைந்துள்ளதால் மிகை அதிகரிப்பு 1,744 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டில் வருமான மதிப்பீட்டை தயாரிக்கும் போது சேமிப்புக் கணக்கின் வட்டி வருமானம் பாதீட்டு மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சிறப்பு வெகுமதி செலவின பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையை விட 88 சதவீதத்தினால் குறைந்தமையும், மோட்டார் வாகன வெகுமதி செலவின பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையை விட 64 சதவீதத்தினால் குறைந்தமையும் மற்றும் களியாட்ட வெகுமதி கட்டுநிதி செலவு மதிப்பிடப்பட்ட செலவை விட 24 சதவீதத்தினால் குறைந்தமையும் இடம்பெற்றிறுந்ததுடன், வெகுமதி நிதிய பிரிவின் உட்கட்டமைப்பு மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டிலிருந்து எவ்வித தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆவ்வாறே ஒற்றையர் படை இல்லம் மற்றும் குடியிருப்பு இல்லங்களை நிர்மாணிக்கும் செலவினம் மதிப்பிடப்பட்ட செலவினத்தை விட 38 சதவீதம் குறைந்திருந்தது. 2024 ஆண்டிற்காக இவ்வாறான வேறுபாடுகள் நிலவியததனால் பாதீடு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	பொலிஸ் வெகுமதி நிதியின் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது வேறுபாடுகளைக் குறைத்துக் கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுப்பதென.	பாதீடு தயாரிக்கும் போது மிகவும் நடைமுறை சாத்தியமாக தயாரித்தல் மற்றும் பாதீட்டுக்கு நேரொத்ததாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.